## பத்தாம் வகுப்பு – சமூக அறிவியல்

## கூடுதல் வினாக்கள் – வரலாறு – 2 மதிப்பெண் வினா–விடைகள்

**1. எப்.டி.ஆர்.ன் தேர்தல் வாக்குறிதி என்ன ?**

1. நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்
2. அமெரிக்க மக்களுக்கு புதிய பயனுரிமைக் கொள்கையை அர்ப்பணிக்க நான் உறுதியளிக்கிறேன்

**2. முதல் உலகப் போருக்குப் பின் தோன்றிய கொள்கைகள் யாவை ?**

1. ஜனநாயகம் 2. பொதுவுடமை 3. பாசிகம் 4. நாசிசம்

**3. அட்லாண்டிக் சாசனம் பற்றி குறிப்பு வரைக.**

1. 1941 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இங்கிலாந்து பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் மற்றும் அமெரிக்க அதிபர் எப்.டி.ரூஸ்வெல்ட் அட்லாண்டிக் சாசனத்தில் கையெழுத்திட்டனர்
2. அகஸ்டா போர்க்கப்பல் அட்லாண்டிக் கடலில் இருந்ததால் இப்பெயர் பெற்றது.

**4. அச்சு, நேச, நடுநிலை நாடுகள் யாவை ?**

1. அச்சு நாடுகள் – இத்தாலி, ஜெர்மனி, ஆஸ்திரியா–ஹங்கேரி
2. நேச நாடுகள் – இங்கிலாந்து, பிரான்சு, ரஷ்யா
3. நடுநிலை நாடுகள் – போர்ச்சுகல், ஸ்பெயின், சுவிட்சர்லாந்து

**5. ஐ.நா. சபையின் அலுவல் மொழிகள் யாவை ?**

1. அராபிக் 2. சைனீஷ் 3. ஆங்கிலம்
4. பிரான்சு 5. ரஷ்யன் 6. ஸ்பானிய மொழிகள்

**6. ஐ.நா. சபைக்கு நிதி உதவி எங்கிருந்து வருகிறது ?**

1. ஐ.நாவின் நிதி பெரும்பகுதி அமெரிக்காவிடமிருந்தும் மற்றும்
2. பிற உறுப்பு நாடுகளிடமிருந்தும் கிடைக்கின்றன

**7. அறிஞர் அண்ணாவின் தமிழ் வளர்ச்சித் திட்டத்தை குறிப்பிடுக.**

1. 1967 ஏப்ரல் 16 ஆம் நாள் சென்னை மாநிலம் என்பதை தமிழகம் என்று பெயர் மாற்றம் செய்தார்.
2. புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள செக்ரடேரியட் என்பதை தலைமைச் செயலகம் என்று மாற்றினார்
3. சத்யதேவே ஜயதே என்ற அரசுக் குறிக்கோளை “வாய்மையே வெல்லும்” எனற்று மாற்றினார்
4. ஸ்ரீ, ஸ்ரீமதி, குமாரி என்ற சமஸ்கிருத வார்த்தைகளுக்கு மாற்றாக திரு, திருமதி மற்றும் செல்வி என்ற தமிழ் சொற்களை அறிவித்தார்.

**8. ஐரோப்பிய ஒன்றியம் தோன்றுவதற்கான காரணம் யாது ?**

1. இரண்டாம் உலகப்போரின் முடிவில் பிரான்சு மற்றும் ஜெர்மனி நாடுகளுக்கிடையிலான போர் ஒரு போதும் பாதிக்கக்கூடாது என்று ஜீன் மோனட் என்ற பிரான்ஸ் அரசியல்வாதி வெளிப்படுத்தினார்.
2. இதனை இத்தாலி மற்றும் பெனிலக்ஸ் நாடுகளும் தங்கள் ஆதரவை அளித்தன

**9. பெனிலக்ஸ் நாடுகள் எவை ?**

1. பெல்ஜியம் 2. நெதர்லாந்து 3. லக்ஸம்பர்க்

**10. மறுமலர்ச்சி இயக்கங்கள் என்றால் என்ன ?**

1. இந்திய மக்கள் மேற்கத்திய கருத்துக்களான பகுத்தறிதல், சமத்துவம், சுதந்திரம் போன்ற கருத்துக்களால் கவரப்பட்டு, இந்திய பண்பாடு இருந்த குறைகளைக் களைந்து, பழம்பெரும் கலாச்சார புகழை மீண்டும் கொண்டு வர விரும்பினர்.
2. இதன் விளைவாக நாட்டின் பல்வேறு இடங்களில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின. இவையே மறுமலர்ச்சி இயக்கங்கள் எனப்படும்.

**11. இராஜா ராம் மோகன் ராய் எழுதிய நூல்கள் யாவை ?**

1. ஏசு கிறிஸ்துவின் கட்டளைகள்
2. அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் வழி

**12. சுவாமி தயானந்த சரஸ்வதியின் சீடர்கள் யார் ?**

1. லாலா லஜபதிராய் 2. லாலாஹன்ஸ்ராஜ் 3. பண்டித குருதத் 4. திலகர் 5. கோகலே

13. இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றம் பற்றி கூறுக.

1. ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்பவரின் ஆலோவனையின் இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது.
2. 1885ல் மும்பையில் W.C.பானர்ஜி தலைமையில் முதல் கூட்டம் நடைபெற்றது.

14. இந்திய தேசிய காங்கிரஸின் முதல் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் யார் ?

1. இந்தியாவிலிருந்து 72 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்
2. 1. தாதாபாய் நௌரோஜி 2. சுரேந்திரநாத் பானர்ஜி 3. மதன்மோகன் மாளவியா
   4. எம்.ஜி.ரானடே 5. கோகலே 6. பெரோஷா மேத்தா 7. ஐ.சுப்ரமணிய அய்யர்

15. சூரத் பிளவு பற்றி கூறுக.

1. 1907–ல் நடந்த சூரத் மாநாட்டில் மிதவாதிகளுக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே காங்கிரஸ் தலைவரை தேர்ந்தெடுப்பதில் மோதல் ஏற்பட்டது.
2. காங்கிரஸ் இரண்டாக பிரிந்து தீவிரவாதிகள் வெளியேறினர்

16. சில தீவிரவாதிகள் பெயர்களை குறிப்பிடுக

1. பாலகங்காதர திலகர் 2. லாலா லஜபதிராய் 3. பிபின் சந்திர பால் 4. அரவிந்த கோஷ்

17. கிலாபத் இயக்கம் பற்றி கூறுக

1. முதல் உலகப்போரில் துருக்கியை பிரிட்டனும் பிரான்சும் தங்களுக்கு பங்குப் போட்டுக் கொண்டனர்.
2. உலக முஸ்லீம் தலைவர் காலிப் அவமதிக்கப்பட்டார்.
3. இதனால் ஆங்கில அரசை எதிர்த்து இந்தியாவில் முகமது அலி, சவுகத் அலி சகோதரர்கள் கிலாபத் இயக்கத்தை தொடங்கினர்
4. இதனை காந்தியடிகள் ஆதரவு தெரிவித்தார்

18. இந்திய விடுதலைப் போரில் தமிழகத்தில் முதன்முதலில் கலந்து கொண்ட தலைவர்கள் யாவர் ?

1. புலித்தேவர் 2. வீரபாண்டிய கட்டபொம்மன் 3. மருது சகோதரர்கள் 4. வேலுத்தம்பி

19. ஆங்கில ஆட்சியின்போது சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்ட அறிஞர்கள் யாவர் ?

1. ஜி.சுப்ரமணிய அய்யர் 2. வ.உ.சிதம்பரம் பிள்ளை 3. சுப்ரமணிய பாரதி 4. காமராசர்
5. இராஜாஜி 6. பெரியார் 7. திருப்பூர் குமரன் 8. வாஞ்சிநாதன் 9.சுப்ரமணியசிவா

20. அரசியல் ஏகாதிபத்தியம் என்றால் என்ன ?

1. ஒரு நாடு மற்றொரு நாட்டை கைப்பற்றி தங்களுடைய அலுவலர்களை நியமித்து ஏற்கனவே இருந்த அரசியல் அமைப்பை தங்களுக்கு சாதகமாக மாற்றிக் கொள்வது அரசியல் ஏகாதிபத்தியம் எனப்படும்.
2. எ.கா. ஆங்கிலேயர்கள் இந்தியாவைக் கைப்பற்றியது

21. சர்வதேச சங்கம் தோன்றுவதற்கு முன்பு தோன்றிய அமைப்புகள் யாவை ?

1. சர்வதேச சங்கம் – 1915
2. உலக அமைதிக் கூட்டமைப்பு – 1917
3. சுதந்திர நாடுகளின் சர்வதேச சங்கம் – 1918

22. 1930 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார மந்தம் ஏன் பொருளாதார பெருமந்தம் என அழைக்கப்படுகிறது ?

இப்பொருளாதார மந்தம் சோவியத் இரஷ்யாவை தவிர மற்ற பெரிய நாடுகளுக்கும், ஐரோப்பிய நாடுகள் அனைத்தையும் வெகுவாக பாதித்தது. எனவே இது பெருமந்தம் என அழைக்கப்படுகிறது ?

23. உலகப்போர் என்றால் என்ன ?

1. உலகில் பெரும்பாலான நாடுகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ போரில் ஈடுபட்டு உலகில் அனைத்து நாடுகளின் மனித மற்றும் பிற வளங்களின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துவது உலகப்போர் எனப்படும் .
2. எ.கா. முதல் உலகப்போர், இரண்டாம் உலகப்போர்

24. புதிய சீரமைப்புக் கொள்கை எதனை அடிப்படையாகக் கொண்டிருந்தது ?

புதிய சீரமைப்புக் கொள்கை உதவி, மீட்பு, சீர்திருத்தம் என்ற மூன்று அம்சங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

25. ரத்து செய்யும் உரிமை (வீட்டோ) என்பதை விளக்குக.

1. ஐ.நா.வின் பாதுகாப்பு மன்றத்தின் நிரந்தர உறுப்பினர்களுக்கு ரத்து செய்யும் எதிர்வாக்கு உரிமை உள்ளது.
2. அவையில் எடுக்கப்படும் எந்த முடிவுகளையும் ரத்து செய்யும் உரிமை இந்த நிரந்தர உறுப்பினர்களுக்கு உண்டு. இதையே ரத்து செய்யும் உரிமை என்கிறோம்.

26. இராஜா ராம் மோகன்ராய் எங்கு எப்போது இறந்தார் ?

1. முகாலாய மன்னர் இரண்டாம் அக்பருக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வு ஊதியத்தை உயர்த்தப் பெற இங்கிலாந்து சென்றார்.
2. 1833ல் பிரிஸ்டல் என்ற இடத்தில் இறந்தார்.

27. அறிஞர் அண்ணாவின் தமிழ் வளர்ச்சித் திட்டத்தை குறிப்பிடுக.

1. 1967–ல் ஏப்ரல் 16–ம் நாள் சென்னை மாநிலம் என்பதை தமிழகம் (அ) தமிழக அரசு என்று பெயர் மாற்றம் செய்தார்.
2. புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள செக்ரடேரியட் என்பதை தலைமைச் செயலகம் என்றும்,
3. சத்யமேச ஜெயதே என்ற அரசுக் குறிக்கோளை “வாய்மையை வெல்லும்” என்றும்,
4. ஸ்ரீ, ஸ்ரீமதி, குமாரி என்ற சமஸ்கிருத வார்த்தைகளுக்கு மாற்றாக திரு, திருமதி மற்றும் செல்வி என்ற தமிழ் சொற்களை அறிவித்தார்.

28. ஐ.நா.வின் தோற்றத்திற்கு காரணமாக தலையவர்கள் யாவர் ?

1. அமெரிக்க குடியரசுத் தலைவர் எப்.டி.ரூஸ்வெல்ட்
2. இங்கிலாந்தின் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில்

29. தேசிய சமதர்மவாதிகள் என்று அழைக்கப்பட்டவர்கள் யார் ?

ஹிட்லரின் ஆதரவாளர்கள் தேசிய சமதர்மவாதிகள் என்று அழைக்கப்பட்டனர்.

30. பதுங்கு குழிப்போர் முறையைப் பின்பற்றிய நாடுகள் எவை ?

1. பிரெஞ்சுப் படைகளும் 2. ஜெர்மானியப் படைகளும் பதுங்கு குழிப்போர் முறையை பின்பற்றின.

31. ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் முக்கிய அதிகாரம் எது ?

ஐரோப்பிய ஆணையத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை அங்கீகரிப்பது அல்லது மாற்றங்கள் செய்வதாகும்.

32. தியோசோபி என்றால் என்ன ?

1. “தியோஸ்” என்றால் கடவுள் என்றும் “சோபஸ்” என்றால் அறிவு என்றும் பொருள்படும்.
2. ஆகவே தியோசோபி என்றால் “கடவுளைப் பற்றிய அறிவு” என்று பொருள்படும்.

33. சத்திய சோதக் சமாஜ் – குறிப்பு வரைக.

1. 1873ம் ஆண்டு சத்திய சோதக் சமாஜ் என்ற அமைப்பை ஜோதிபாபூலே ஏற்படுத்தினார்.
2. பிராமணர்கள் பிடியிலிருந்து தாழ்த்தப்பட்டோரை விடுதலைச் செய்வதே இதன் நோக்கம்.

34. ஜீவ காருண்யம் என்றால் என்ன ?

1. வள்ளலார் அன்பு வழியில் ஆன்மீகத்தை அடையலாம் என்ற உறுதியான எண்ணம் கொண்டிருந்தார்
2. ஆகவே, மனிதர்களிடத்து மட்டுமின்றி தாவரங்கள், புழு, பூச்சிகள் மற்றும் விலங்குகள், பறவைகள் போன்ற அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்தினார்.
3. இதனையே ஜீவ காருண்யம் (உயிர்களிடத்து அன்பு செலுத்துதல் என்று அழைக்கின்றோம்.

35. எந்த இரண்டு சட்டங்கள் இந்தியர்களின் தேசிய உணர்வுகளை அதிகப்படுத்தின ?

1. ஆயுதச் சட்டம் 2. பிராந்திய மொழிச் சட்டம்

36. ரொளலட் சட்டம் பற்றி குறிப்பு வரைக.

1. 1919ல் இந்திய சுதந்திர போராட்டத்தை ஒடுக்க ரௌலட் சட்டம் கொண்டுவரப்பட்டது.
2. இதன்படி எவரையும் உத்தரவின்றி கைது செய்யலாம், சிறையில் அடைக்கலாம்.

37. சுபாஷ் சந்திர போஸின் புகழ்பெற்ற முழக்கத்தை எழுதுக.

1. ஜெய்ஹிந்த் என்ற சுபாஷ் சந்திர போஸின் முழக்கம் புகழ் பெற்ற முழக்கமாக மாறி இந்திய முழுக்க எதிரொலித்தது.
2. "டெல்லியை நோக்கிச் செல்" என்ற மற்றொரு புகழ்பெற்ற முழக்கமும் போஸினுடையதாகும்.

38. போர்ச்சுக்கீசியர்களின் வசமிருந்த பகுதிகள் எவை?

1. கோவா 2. டையூ 3. டாமன் ஆகிய பகுதிகள் போர்ச்சுக்கீசிரியர்கள் வசமிருந்த பகுதிகளாகும்.

39. இடைக்கால அரசாங்கம் குறிப்பு வரைக.

1. நேருவை பிரதமராகக் கொண்ட இடைக்கால அரசு 1946ல் நிறுவப்பட்டது.
2. இவ்வரசை ஏற்படுத்த நேரு ஜின்னாவின் உதவியை நாடினார்.
3. ஆனால் ஜின்னா மறுத்து பாகிஸ்தான் தனிநாடு கோரிக்கையில் பிடிவாதமாக இருந்ததால் இந்தியப் பிரிவினை தவிர்க்க முடியாத ஒன்றாயிற்று.

40. பிரெஞ்சுப் பகுதிகள் இணைக்கப்பட்ட இந்தியப் பகுதிகள் எவை?

பிரெஞ்சு அரசின் அனுமதியுடன் 1. பாண்டிச்சேரி 2. காரைக்கால் 3. மாஹி 4. ஏனாம் 5. சந்திரநாகூர் ஆகிய பகுதிகள் 1954ம் ஆண்டு இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டன.

41. எதன் மூலம் மக்கள் மனதில் தேசியப்பற்று வளர்ந்தது?

1. சென்னை மகாஜன சபை பல்வேறு பொருட்காட்சிகளை நடத்தி, குறிப்பாக அனைத்திந்திய காதி (கைத்தறி) கண்காட்சி மற்றும் சுதேசி பொருட்கள் கண்காட்சி மூலம் மக்கள் மனதில் தேசியப் பற்றை வளர்த்தது.

42. பெண்களுக்கான எந்த சட்டங்களை பெரியார் இயற்றினார்?

1. அரசு விதவைகள் மறுமணச்சட்டம்
2. பெண்கள் சொத்துரிமைச் சட்டம்
3. தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் போன்ற சட்டங்களை பெரியார் இயற்றினார்.

43. நீதிக்கட்சி எந்த பத்திரிக்கைகளை அச்சிட்டு வெளியிட்டது?

1. தமிழில் திராவிடன் 2. தெலுங்கில் ஆந்திரபிரகாசிகா 3. ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ் என்ற பத்திரிக்கைகள் அச்சிட்டு வெளிட்டது.

44. பொருளாதார பெருமந்தத்தை எப்.டி.ஆர். எவ்வாறு நிலைக்கு கொண்டு வந்தார்?

1. புதிய பயனுரிமை என்ற சீரமைப்புக் கொள்கையை உருவாக்கினார்.
2. உதவி, மீட்பு, சீர்திருத்தம் என்ற மூன்றின் மூலம் நிலைக்கு கொண்டு வந்தார்.

45. இரண்டாம் உலகப்போரில் பங்கு பெற்ற இரு அணி நாடுகள் யாவை?

1. இங்கிலாந்தின் தலைமையிலான நேச நாடுகள்
2. ஜெர்மனியின் தலைமையிலான அச்சு நாடுகள்

46. ஆகஸ்டு நன்கொடை பற்றி கூறுக.

1. இங்கிலாந்து பாராளுமன்றத்தில் இந்தியர்க்கு பிரதிநிதித்துவம்
2. சின்ஹா என்பவர் 1940ல் இந்திய பிரதிநிதியாகப் பங்கேற்றார்.

47. இந்தியா எவ்வாறு பிரிக்கப்பட்டது?

1. சிந்து, மேற்கு பஞ்சாப் உள்ளிட்ட சில மாநிலங்கள் பாகிஸ்தான் என்றும்
2. பிற பகுதிகள் இந்தியா என்றும் பிரிக்கப்பட்டது.

48. முதல் அபினிப்போர் பற்றி கூறுக.

1. 1800ல் சீன அரசு அபினி வர்த்தகத்தை தடை செய்தது.
2. 1839ல் ஆங்கிலேயர் அபினி வர்த்தகத்தை நடத்த சீன அரசின் மீது போர் தொடுத்தனர்.
3. 1842ல் நான்கிங் உடன்படிக்கையின் படி முடிவுற்றது.